**காவல் துணை ஆணையாளர், நிர்வாகம், சென்னை பெருநகர காவல் வேப்பேரி, சென்னை-7 அவர்களின் செயல்முறை ஆணை**

**முன்னிலை :திரு கா.பெரோஸ்கான் அப்துல்லா**

ந.க.எண்.கஅபரி/254 /68437/2020 நாள் :10.09.2020

செ.கா.ஆணை எண். 2078 /2020

பொருள் சென்னை பெருநகர காவல் - கருணை அடிப்படை பணி நியமனம் - சென்னை மாவட்ட எழும்பூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக 1021 பணிபுரிந்து 13.12..99 அன்று மறைந்த 8.பத்மநாபன் என்பவரது மகன் திரு P.நாகராஜன், இளநிலை உதவியாளர் என்பவரது பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல் தொடர்பாக.

<u>பார்வை</u> 1.காவல் துறை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை அவர்களிடமிருந்து அரசக்கு அனுப்பபப்புட்ட கடிதம் ந.க.எண்.105207/சிஎஆர்1/15 நாள் 12.03.16.

2.அரசாணை (நிலை) எண்.80 நாள் 02.03.16 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை (க்யூ-1 ) துறை நாள் 02.03.16

3. தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்.041769/சிஎஆர்1/16 நாள் 21.12.17

********

சென்னை மாவட்ட எழும்பூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக 1021 பணிபுரிந்து 13.12..99 அன்று மறைந்த 8.பத்மநாபன் என்பவரது மனைவி திருமதி.ப.பத்மினி என்பவர் தனது மகன் திரு P.நாகராஜன் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி மனு சமர்ப்பித்துள்ளார். நியமனதாரர் விண்ணப்ப நாளில் பி.எஸ்ஸி. தேர்ச்சி பெற்றிருந்ததால், இக்கல்வித் தகுதியின் அடிப்படையில் இவர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அனுமதி பெற்ற இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யலாம் என்ற கருத்துரு காவல் துறை இயக்குநருக்கு அனுப்பப்பட்டு, அன்னாருக்கு கணினி விவர பதிவாளர் பணி வழங்கப்பட்டு 10.09.05 முற்பகல் முதல் காவல் இணை ஆணையாளர், மேற்கு மண்டலத்தில் பணிபுரிந்து வந்துள்ளார். இவருக்கு 01.05.07 அன்று கணினி விவர பதிவாளர் பதவியில் இவ்வலுவலக ஆணை எண்.1733/2016 நாள் 09.05.16ல் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. பின்னர் தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்.179367/என்ஜிபி2(2)/2019 நாள் 20.09.19ன்படி, இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு, 28.09.19 முற்பகல் முதல் இவ்வலுவலகத்தில் பணிக்கு அறிக்கை செய்து பணிபுரிந்து வருகிறார்.

2. தற்காலிக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டவர்கள் பணியினை அவரது நியமன அதிகாரியே அவர் பணிநியமனம் செய்யப்பட்ட நாள் முதல் பணிவரன்முறை செய்யக் கோரி பார்வை ஒன்றில் காணும் கடிதத்தில் காவல் துறை இயக்குநர் அவர்கள் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார். இது தொடர்பாக கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற அரசு பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்துவதில் பல்வேறு காரணங்களால் ஏற்படும் காலதாமத்தினை கருத்திற்கொண்டு 01.02.16 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எவ்வித விதி தளர்வும் தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணிநியமனத்தை சம்பந்தப்பட்ட நியமன அலுவலரே பணிவரன்முறை செய்து ஆணையிடலாம் என பார்வை இரண்டில் காணும் அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

3.பார்வை இரண்டில் காணும் அரசாணையில் கூறியுள்ள விதிமுறைகளின்படியும் மற்றும் பார்வை மூன்றில் காணும் தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்.041769.சிஎஆர்1./2016 நாள் 21.12.17-ல் கூறப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும் வயது வரம்பு, கல்வி தகுதி ஆகியவற்றில் எவ்வித விதி விலக்குமின்றியும் அரசாணை நிலை எண்.560 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை நாள் 03.08.97 மற்றும் அதன் தொடர்பான ஆணைகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளில் எந்தவித விதி தளர்வுமின்றி பணிநியமனம் செய்யப்பட்ட திரு P.நாகராஜன், தற்காலிக இளநிலை உதவியாளர், காவல் ஆணையாளர் அலுவலகம், சென்னை பெருநகர காவல் என்பவர் உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அவருடைய பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் 28.09.19 முற்பகல் முதற்கொண்டு பணிவரன்முறைப்படுத்தி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

ஓம் /.கா.பெரோஸ்கான் அப்துல்லா
காவல் துணை ஆணையாளர்,
நிர்வாகம்
சென்னை பெருநகர காவல்.

பெறுநர்
திரு P.நாகராஜன்,
இளநிலை உதவியாளர், சென்னை பெருநகர காவல்
நகல்
காவல் துறை தலைமை இயக்குநர், சென்னை-4
கண்காணிப்பாளர், பணிப்பிரிவு-1, ஊதிய நிர்ணயப்பிரிவு, கணிப்பொறி பிரிவு, துணைப்பட்டியல் பிரிவு, தண்டனை பிரிவு, விடுப்பு பிரிவு
இருப்புக் கோப்பு

12.9.20
நிர்வாக அலுவலர், நிர்வாகம்

11/9/2020